அரசுக்கு அனுப்பும். மத்திய அரசிடமிருந்து ஒருவேளை நிதி கிடைப்பதற்கு தாமதம் ஏற்படும் அல்லது கிடைக்காது என்ற நிலை இருக்குமானால் மாநில அரசு மூலமாக அதை நிறைவேற்ற முடியுமா என்பதைப் பற்றி நாம் ஆலோசனை செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 483, டி. எம். ரங்கராஜன் மற்றும் திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

483—

அரசு மருத்துவமனைகளில் இரத்ததானம் செய்வோரை பரிசோதனை செய்தல்

*16918—திரு. டி. எம். ரங்கராஜன்

திருமதி கே. மரியம் உல் ஆசியா :

மாண்புமிகுமக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மருத்துவமனைகளில் இரத்ததானம் செய்வோருக்கு எய்ட்ஸ் நோய் உள்ளதா என்று பரிசோதனை செய்தபின் தான் இரத்தம் பெறவேண்டும் என்ற விதிமுறை இல்லையா?

(ஆ) ஆம் எனில், விதிகளைத் திருத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) விதிமுறைகள் உண்டு.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'ஆம்' என்று சொன்னார்கள். அரசு மருத்துவமனைகளில் மட்டுமல்லாமல் இன்றைக்கு தனியார் மூலமாக ரத்த தானம் எல்லாம் செய்யப் படுகின்றன. அதேபோல் தனியார் மூலமாக ரத்ததானம் செய்கின்றபோது இந்த விதிமுறைகள் பின்பற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் மத்திய அரசின் சட்டம். அந்த அடிப்படையில் தான் இந்த ரத்த பரிசோதனை செய்ய வேண்டுமென்று நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. யார் ரத்த தானம் செய்தாலும் அந்த ரத்தத்தை பரிசோதனை

1993 ஏப்ரல் 27]

செய்கிறபோது இவைகள் அத்தனையும் பார்க்கப்படவேண்டுமென்று ஒரு உத்தரவு எல்லாயிடங்களிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதைக் கண்காணித்து வருகிறார்கள்.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள பெரும்பாலான தனியார் மருத்துவமனைகளில் உள்ள நிலைமையைப் பார்க்கும்போது ரத்தம் மற்றும் ஊசிகள் மூலம் குழந்தைகளுக்கு எய்ட்ஸ் எளிதில் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. ரத்த மாற்றம் மூலம் எய்ட்ஸ் கிருமிகள் பரவுவதால் எய்ட்ஸ் கிருமிகள் உள்ளதா என்பதைப் பார்க்காமல் மருத்துவமனைகளில் ரத்தத்தை வழங்கும் வங்கிகளின் உரிமையை ரத்து செய்வதற்கும், அத்துடன் அத்தகைய ரத்த வங்கிகள்மீது சட்டப்படியான நடவடிக்கை எடுப்பதற்கும் அரசு ஆவன செய்யவேண்டுமென்றும், அதேநேரத்தில் எச்சரிக்கை வாழ்வியல் நெறி முறைகளைப் பின்பற்றுவதன் மூலம் எய்ட்ஸ் என்ற கொடிய ஆட்கொல்லி நோயிலிருந்து தப்பிக்கும் வழிமுறைகளைக் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு தொண்டு நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள், ஆசிரியர்கள், மருத்துவ அலுவலர்கள் ஆகியோர் கொண்ட குழுவை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாராக இருந்தாலும் சரி, அரசு சம்பந்தமாக இருந்தாலும் சரி, இந்த ரத்தத்தை எடுத்துக் கொடுக்கிறபோது அதை முறையாக பரிசோதித்துக் கொடுக்கவேண்டுமென்ற உத்தரவு எல்லாயிடத்திற்கும் சொல்லப்பட்டு இருக்கிறது. அதை மீறுகிறவர்கள் மீது கண்டிப்பாக நாம் நடவடிக்கை எடுக்கலாம். மருத்துவர்களும் அதில் மிகவும் கண்காணிப்போடு இருக்கவேண்டும் என்பது அரசாங்கத்தினுடைய உணர்வாக ஏற்கனவே பலமுறை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே, ஒவ்வொரு தனிப்பட்ட முறையிலும் இன்றைக்கு பிராக்ட்டிஸ் செய்கின்ற மருத்துவர்களுக்கு நாம் இதை உத்தரவாகப் போடவில்லை என்று சொன்னாலும் அவர்கள் இதை ஏற்று செயற்படுத்த வேண்டிய கடமை அவர்களுக்கு இருக்கிற காரணத்தால் அரசாங்கம் ஏற்கனவே போட்டு இருக்கிற உத்தரவுப்படி மற்ற அரசு மருத்துவமனைகள், ரத்த வங்கி போன்ற இடங்களில் இதை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது.

மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்டார்கள். ஏற்கனவே இதுசம்பந்தமாக நடவடிக்கை பல்வேறு கட்டங்களில் எடுக்கப்பட்டிருக்கிறது. அந்தந்தப் பள்ளிகளிலே இதைப்பற்றி சொல்ல

வேண்டுமென்றும் இது பொதுமக்களுக்குத் தெரிகிற வகையில் ல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படவேண்டுமென்றும் சொல்லி நம்முடைய துறையின் சார்பாக மிகப் பெரிய அளவில் இதற்கான விளம்பரங்கள் எல்லாம் செய்து கொண்டிருக்கிறோம்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிங்கை கோவிந்தராசு.

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகப் பெரிய ஆட்கொல்லி நோயாக இருக்கக்கூடிய இந்த எய்ட்ஸ் நோயினாலே மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை நாம் எல்லோரும் பல வகையிலே அறிந்து இருக்கிறோம். ரத்தப் பரிசோதனைக்காக வருகின்றவர்களில், இந்த எய்ட்ஸ் நோய் உள்ளவர்கள் இதுவரை எத்தனை பேர் வந்திருக்கிறார்கள். அப்படி பரிசோதனை செய்தபோது யாராவது அந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் ரத்ததானம் செய்ய வந்திருக்கிறார்களா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நோய் தாக்கப்பட்டவர்கள், அந்த நோய்தான் தாக்கப்பட்டு இருக்கிறது என்று தெரியாமலேயே சில நேரங்களிலே வந்து, அதற்குப் பின்னாலே அவர்களுக்கு எய்ட்ஸ் நோய் இருக்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எத்தனை பேர் என்ற கணக்கு தற்போது என்னிடத்திலே இல்லை. அவர்கள் ரத்தம் டொனேட் செய்வதற்காக வருகின்றபோது எவ்வளவு பேர் கண்டுபிடிக்கப்பட்டார்கள்; அவர்களில் நோய்வாய்ப்பட்டவர்கள் எத்தனை பேர் வந்தார்கள் என்ற கணக்கு என்னிடத்திலே தற்போது இல்லை. ஆனால் கண்டுபிடிப்பு நடந்து கொண்டே இருக்கிறது. எனவே, இதுகுறித்து தனியாகக் கேள்வி போட்டால், எவ்வளவு பேர் இதுவரை கிடைத்திருக்கிறார்கள் என்பதைப் பற்றி நான் விவரங்கள் கொடுக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. பி. சந்திரசேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரத்ததானம் செய்கின்றவர்களுக்கே சில நேரங்களில் ரத்தம் தேவைப்படுகிற சூழ்நிலை உருவாகிவிடும். ஆகவே இப்படிப்பட்ட நோய் உள்ளவர்கள் இருக்கிறார்களா என்று பரிசோதனை மூலம் தெரிகின்றபோதே, அவர்களுடைய ரத்தங்கள் எந்த குரூப்பைச் சேர்ந்தது என்று அவர்களுக்கு சர்டிபிகேட் வழங்கப்படுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

1993 ஏப்ரல் 27]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அநேகமாக பிளட் டொனேஷனுக்கு வரக் கூடியவர்களுக்கு அவர்களுடைய ரத்தம் எந்த குரூப்பைச் சார்ந்தது என்று அவர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. அனேக மாக ரத்தத்தைத் தொடர்ந்து கொடுத்துக் கொண்டிருப்பவர் களுக்கு, ஒவ்வொருவருக்கும் தெரிகிறது. அவர்களுக்கே தெரியும். அவர்களே தெரிந்து வைத்திருக்கிறார்கள். எனவே, பிளட் குரூப்பைக் கொடுப்பதிலே எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. ஆனால் அவர்களுக்கு இதுபோல் வியாதி இருக்கிறதா என்பதைக் கண்டுபிடிப்பதுதான் இப்போது முக்கிய நோக்கமாக இருக்கிறது. எனவேதான், பிளட் டொனேட் கொடுக்க வரக் கூடியவர்களை தரோவாக பரிசோதனை செய்த பின்னாலேதான் ரத்தத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற ஒரு நடைமுறையை நாம் வைத்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. நடேசன்.

திரு. மு. நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த எய்ட்ஸ் ** பரவுகின்றதாகச் சொல்லுகிறார்கள், ஆகவே, **

கட்டுப்பாட்டை நம்முடைய அரசு விதிக்குமா என்பதை இந்த நேரத்திலே தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு அந்தமாதிரி கட்டுப் பாட்டை விதிக்க முடியாது. மத்திய அரசினுடைய பொறுப்பிலே தான் அதைச் செய்ய முடியும். ஆனால், **

என்று மொத்தமாக நாம் சொல்வது, வரக்கூடிய ** ** மனதைப் புண்படுத்தக்கூடியதாக அமையும் என்று நான் கருதுகிறேன். எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அந்தப் பகுதியை மட்டும் குறிப்பிலேயிருந்து எடுத்துவிட்டால் சரியாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்ற பகுதி நீக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 484 திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.